

# “முத்தமிழறிஞர் கலைஞரின் ஐம்பெரும் முழக்கங்கள்”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் ஏழாவது அமர்வில் தி.மு.கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்களைக் கொண்ட தலைப்புகளின்கீழ் இளம் பேச்சாளர்கள் ஆற்றிய உரை :**

## அண்ணா வழியில் அயராது உழைப்போம்!

**– செ.சஞ்சய், தூத்துக்குடி.**

“அண்ணா வழி என்பது என்ன? தந்தை பெரியாரின் வழிதான் அண்ணாவின் வழி. அண்ணாவின் வழிதான் கலைஞருடைய வழி, கலைஞருடைய வழிதான் கழகத் தலைவரின் வழி. சமத்துவம், சகோதரத்துவம், சமூக நீதி, பாலின சமத்துவம், பெண் விடுதலை, ஜனநாயகத்தைப் போற்றுதல் - இவைதான் பெரியார், அண்ணா கொள்கைகள். தந்தை பெரியார் மக்களோடு மக்களாக நின்று போராடி, மக்களுக்கான உரிமையை நிலைநாட்டிவிட முடியும் என்று எண்ணினார். ஆனால், அண்ணா சற்று மாறுபட்டு, சிந்தித்துத் தேர்தல் அரசியலில் நாம் போட்டியிட்டால் பெரியார் எதை எதையெல்லாம் நிறைவேற்ற முயல்கிறாரோ அவை அனைத்தையும் ஆட்சி அதிகாரம் கையில் கிடைத்தால் நிறைவேற்ற முடியும் என்று சொன்னார்.

* இப்போது அண்ணா வழியில் எப்படி அயராது உழைக்க வேண்டும்? வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் மும்முனை போட்டி, நான்கு முனை போட்டி என்கிறார்கள். இல்லை, அது இருமுனை போட்டிதான்.



* பெரியார், அண்ணா, கலைஞர் வகுத்து வைத்திருக்கிற கொள்கைகளைத் தாங்கி நிற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அணிக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாசிச பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்திருக்கக்கூடிய கட்சிகளுக்குமான போட்டி. இதில் திராவிடம் வெல்ல, அண்ணா வழியில் அயராது உழைப்போம்!”

## ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்!

**– அ.தா.டெக்சின் ரொமேரியோ, சென்னை.**

“ஆதிக்கமற்ற சமுதாயம் என்றால் என்ன என்ற ஒரு கேள்வி வரும். இந்த உலகத்தில் இருக்கக்கூடிய கண்டங்களில் எந்த கண்டத்தில் ஒரு நாடு அடிமைப்படுத்தப்படுகிறதோ, அந்த நாட்டுக்காகப் பேசுவான் தி.மு.க.காரன். ஒரு நாட்டில் ஒடுக்கப்படும் மாநிலத்துக்காகவும், ஒரு மாநிலத்துக்குள் வஞ்சிக்கப்படும் மாவட்டத்துக்காகவும், அந்த மாவட்டத்துக்குள் நசுக்கப்படும் கிராமத்துக்காகவும், அந்தக் கிராமத்துக்குள் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்காகவும், அந்தச் சமூகங்களில் நசுக்கப்படும் பெண்களுக்காகவும் நிற்பதுதான் தி.மு.க.

நான் கண்ணகி நகர் பகுதியில் இருந்து வருகிறேன். சமீபத்தில்கூட ஆசிய கபடிப் போட்டியில் கார்த்திகா என்ற பெண் தங்கம் வென்றார், அந்தப் பகுதியைச் சேர்ந்தவன்தான் நானும். கண்ணகி நகரில் அனைத்துக் கட்சிக்காரர்களும் இருப்பார்கள். எல்லா



கட்சிக்காரர்களாலும் கண்ணகி நகர் குடிசை மாற்று வாரியப் பகுதியில், மேடை போடுவதற்கும் கொடி கட்டுவதற்கும் கீழே நின்று கை தட்டுவதற்கும் மட்டுமே பயன்படுத்தப்பட்ட ஒரு கூட்டத்திலிருந்து, முதல்முறையாக ஒருவனை மேடை ஏற்றி யிருக்கிறது தி.மு.க.

தெருத்தெருவாக மின்பதாகைகள் கட்டவே பயன்படுத்தப்பட்ட ஜனங்களில் இருந்து முதல் முறையாக வெளிச்சத்துக்குக் கீழே நிற்க வைத்திருக்கிறது தி.மு.க. மைக் போட மட்டுமே பயன்படுத்தப்பட்ட கூட்டத்திலிருந்து, ‘தம்பி, உனக்கு நான் மைக் போடுகிறேன், பேசுடா!’ என்று என்னைப் பேச வைத்திருக்கிறது தி.மு.க.”

## இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!

**– ர.அகிலா, நாகப்பட்டினம்.**

“1947-இல் ஆங்கிலேயர் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆனால், 1937-இல் தொடங்கிய இந்தித் திணிப்பு என்பது 88 ஆண்டுகள் ஆன பிறகும், முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை. பகத்சிங் சொன்னதுபோல் ‘இந்தப் போரை நாங்கள் தொடங்கவும் இல்லை. இந்தப் போர் எங்கள் காலத்தில் முடியப் போவதும் இல்லை.’

இந்தியாவில், 3300 மொழிகள் பேசப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதில், பத்தாயிரத்துக்கும்



குறைவானவர்களால் பேசப்படக்கூடிய மொழி என்றால், அது 300-க்கும் குறைவான மொழிகள்தான். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 8-வது அட்டவணையில், 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளாக இருக்கின்றன. அப்படி, இருக்கும்போது எதற்காக இந்தி மொழிக்கு மட்டும் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்கிற கேள்வி எழுகிறது.

இன்றைக்கு புதிய கல்விக் கொள்கை - 2020-லிலும், இந்தித் திணிப்பு தொடர்கிறது. ‘இந்தித் திணிப்பு எதிர்ப்பு என்பது செத்த குதிரை கிடையாது. அது களைப்புற்று தூங்குகிற குதிரை’ என்பார் முத்தமிழறிஞர் கலைஞர். பல்வேறு காலகட்டங்களாக இந்தித் திணிப்பு நடவடிக்கைகளை ஒன்றிய அரசு செய்துகொண்டுதான் இருக்கிறது. இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்வினை ஆற்றக்கூடிய வகையில், தமிழ்நாடு தொடர்ந்து செயல்படும். தொடர்ந்து போராடும்!”

## வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்!

**– ரா.ரேவதி, தென்காசி.**

“ ‘1955-இல் அறிஞர் அண்ணா ‘திராவிட நாடு’ இதழில் ‘வட மாநிலங்களில் ஒருவரின் சராசரி வருமானம் 600 ரூபாயாக இருக்கிறது. ஆனால், தென்னிந்தியாவில் வெறும் 300 ரூபாயாக இருக்கிறது’ என்று வருத்தத்துடன் எழுதினார். 1960-1961-களில், தமிழ்நாட்டின் வறுமை விகிதம் 59.1 சதவிகிதம். மகாராஷ்டிரா, குஜராத், பீகார் போன்ற மாநிலங்களைவிட வறுமையான மாநிலமாகத் தமிழ்நாடு இருந்தது. ஆனால், இன்றைக்கு



நிலை என்ன? 2023-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி தமிழ்நாட்டின் வறுமை விகிதம் வெறும் 22 சதவிகிதம். வறுமையை மிகத் தீவிரமாக ஒழித்த மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது.

கல்வி, வேலைவாய்ப்பு, வளர்ச்சி என்று எல்லாவற்றிலும் மிகவும் பின்தங்கிய மாநிலமாக, குறிப்பாக வறுமை ஒழிப்பில் பீகாரை விடவும் மோசமான நிலையில் தமிழ்நாடு 1960-களில் இருந்தது. ஆனால், இப்போது கல்வி, வேலைவாய்ப்பு, சுதந்திரம், பெண்களுக்கான முன்னேற்றம், வறுமை ஒழிப்பு என்று 13 துறைகளில் இந்தியாவிலே முதன்மையான மாநிலமாகத் தமிழ்நாட்டை வளர்த்துக் காட்டியிருக்கிறார் நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். இப்படித்தான் வன்முறையைத் தவிர்த்து வறுமையை வென்றிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.”

## மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி

**– சூ.க.தாரணி, ஈரோடு.**

“ஒரு மாநிலம் செயல்படவே கூடாது, அங்கு கல்வி இருக்கவே கூடாது, வேலை வாய்ப்பு கிடைக்கவே கூடாது, அதற்கான எந்த நிதியும் நாங்கள் தரமாட்டோம் என்று ஒரு மாநிலத்தை முழுவதுமாக அழிக்கக்கூடிய நிலையில் இன்றைய ஒன்றிய அரசாங்கம் இருக்கிறது. மாநிலங்களின் உரிமைகளைச் சுரண்டிக் கொண்டிருக்கக்கூடிய அரசாங்கமாகத்தான் இன்றைய பா.ஜ.க. அரசாங்கம் இருக்கிறது.

கல்விக்கான நிதியை ஏன் நமக்குத் தர மறுக்கிறார்கள்? ஏனென்றால், தி.மு.க எல்லோரையும் படிக்க வைக்கிறது, எல்லோரும் படித்தால் நம் வர்ணாசிரமத்தைக் கேள்வி கேட்பார்கள் என்பதால்தான், பா.ஜ.க அரசு நம் கல்விக்கான



நிதியை மறுக்கிறது. அதனால்தான் புதிய கல்விக்கொள்கை என்ற பெயரில் மும்மொழிக் கொள்கையைத் திணிக்கப் பார்க்கிறார்கள். ஆனால், கழகத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், மாநில சுயாட்சிக்காகத் தமிழ்நாடு தொடர்ந்து போராடும், தமிழ்நாடு வெல்லும்!” ●

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**இளம்பேச்சாளர் திருப்பூர் மகிழவன் எழுதிய முகநூல் பதிவு :**

‘தேர்தல் அரசியலில் போட்டியிடுகிற ஓர் அரசியல் கட்சி, முற்போக்கு புத்தகங்களை வாசகர்களிடத்தில் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கில் புத்தகக் கண்காட்சி நடத்துவது வரலாற்றில் இதுவே முதல் முறை என்று நினைக்கிறேன்.

தொகுதிதோறும் திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், இளம் பேச்சாளர்கள் தேர்வு, அவர்களுக்கு இரண்டு நாள் கருத்தியல் பயிற்சி முகாம், மாணவப் பத்திரிகையாளர் திட்டம், திராவிட இயக்க ஆய்வாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் நிதி வழங்கும் திட்டம், தொகுதிதோறும் ஒன்றிய அரசின் கொடுங்கோன்மைக்கு எதிரான கண்டனக் கூட்டங்கள், ஊர்தோறும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கக் கூட்டங்கள் எனத் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும் இளைஞர் அணி தி.மு.க.வின் 75 ஆண்டுக்காலப் பயணத்தை பல்வேறு பரிமாணங்களில் விவரிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டிருக்கும் புத்தக வெளியீட்டு விழாவையும், புத்தகக் காட்சியையும் இணைத்து நடத்துவது, அறிவு இயக்கமாக தி.மு.க. இன்றைக்கும் தொடர்கிறது என்பதற்கு ஆகச் சிறந்த உதாரணம்.’